# 08-11-2024 செய்தி

## ரூ.10 லட்சம் வரை கல்வி கடன்

- 'பிஎம் வித்யாலட்சுமி' திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் வழங்கியுள்ளது. உயர்கல்வி நிறுவனங்களில் படிக்க விரும்பும் மாணவர்களுக்கு வங்கிகள் மூலம் கடனுதவி வழங்க இந்த திட்டம் வகை செய்கிறது.
- இதற்காக, 2024-25 முதல் 2030-31 வரையிலான காலத்துக்கு ரூ.3,600 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- ரூ.7.5 லட்சம் வரை கல்விக் கடன் பெறும் மாணவர்களுக்கு மத்திய அரசு 75% கடன் உத்தரவாதம் வழங்க இந்த திட்டம் வகை செய்ய நிதி நிறுவனங்களின் நிதிச் சுமையை குறைக்க மத்திய அரசு உத்தரவாதம் வழங்குகிறது.
- மேலும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.8 லட்சத்துக்கும் குறைவாக உள்ள மாணவர்களுக்கு வங்கிகள் மூலம் ரூ.10 லட்சம் வரை கடன் வழங்கப்படும். படிப்பை முடிக்கும் வரை, வட்டி மட்டும் செலுத்தினால் போதும்.
- ஓராண்டில், முதலாண்டு முதல் இறுதி ஆண்டு வரை பயிலும் 22 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இத்திட்டத்தால் பயனடைவார்கள்.
- அரசு கல்வி நிறுவனங்களில் பயிலவும், தொழில்முறை அல்லது தொழில்நுட்ப கல்வி பயிலவும் விரும்பும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**முழு வட்டி மானியம்**

- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.4.5 லட்சத்துக்குள் இருக்கும் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பிரதமரின் உயர் கல்வி ஊக்கத்தொகை (பிரதமரின் உச் சதர் சிக்ஷா புரோத்சாஹன் பிஎம்-யுஎஸ்பி) திட்டத்தின்கீழ் ரூ.10 லட்சம் வரையிலான கடனுக்கு, படிப்பை முடிக்கும் வரை முழு வட்டி மானியம் வழங்கப்படும்.
- தொழில்முறை, தொழில்நுட்ப கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்த சலுகை கிடைக்கும். இந்த திட்டத்தின்கீழ் கடன் பெற விரும்பும் மாணவர்கள், மத்திய கல்வித் துறையின் 'பிஎம் வித்யாலட்சுமி' என்ற இணைய தளத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

## ஜெட் ஏர்வேஸ் நிறுவனத்தை கலைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

- நிதி நெருக்கடி காரணமாக திவாலான ஜெட் ஏர்வேஸ் நிறுவனத்தை கலைக்க சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.
- நிதி நெருக்கடியால் 2019-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜெட் ஏர்வேஸ் நிறுவனம் தனது விமான சேவையை நிறுத்தியது. திவால் நடவடிக்கையை தொடர்ந்து தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (என்சிஎல்ஏடி) ஜெட் ஏர்வேஸ் நிறுவனத்தை மீட்டெடுக்க அனுமதி வழங்கியது.
- இதைத்தொடர்ந்து, ஜலான் கலராக் கூட்டமைப்பு (ஜேகேசி) ஜெட் ஏர்வேஸ் நிறுவனத்தை வாங்கியது முதல் தவணையாக ரூ.350 கோடி செலுத்த வேண்டியிருந்த நிலையில் ரூ.200 கோடியை மட்டுமே செலுத்தியது.
- ஆனால், ஜெட் ஏர்வேஸுக்கு கொடுத்த கடன் திருப்பி செலுத்தப்படாத நிலையில் கனரா வங்கி, எஸ்பிஐ, பிஎன்பி உள்ளிட்ட வங்கிகள் ஜெட் ஏர்வேஸ் நிறுவனத்தை ஜேகேசி கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வழக்கு தொடர்ந்தன.
- இந்த நடைமுறையில் விதிகள் எதுவும் பின்பற்றப்படவில்லை என்று அந்த வங்கிகள் குற்றம்சாட்டின.
- இந்த நிலையில், ஜெட் ஏர்வேஸ் தொடர்பான வழக்கில் விசாரணை முடிந்த நிலையில் தலைமை நீதிபதி சந்திர சூட், நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வு நேற்று பிறப்பித்த உத்தரவு.
- நீண்ட காலம் நிலுவையில் உள்ள எந்தவொரு வழக்கிலும் முழுமையான நீதிக்கான உத்தரவு பிறப்பிக்க உச்ச நீதிமன்றத்துக்கு 142 சட்டப்பிரிவு சிறப்பு அதிகாரத்தை வழங்குகிறது.